www.Padasalai.Net www.CBSEtips.in

## அரசுத் தேர்வுகள் இயக்ககம் – சென்னை – 6

## மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வு ஆகஸ்ட் – 2021

## பொதுத்தமிழ் – விடைக்குறிப்புகள்

**விடைத்தாள் மதிப்பிடும்போது கீழே குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.**

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப் பிழையின்றி இருப்பின் முழுமதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து, அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.
4. தவறான விடைகளைக் (x) குறியிட்டும், தொடர்பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப்பிழைகளைக்(^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் ✓ தனித்தனியே குறியிடுதல் வேண்டும்.
6. மிகையாக விடையிருப்பின் 'மிகை' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் 'மீண்டும்' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
8. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும். இல்லையெனில் மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.
9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண் வழங்குதல் கூடாது.

www.Padasalai.Net www.CBSEtips.in

## பகுதி – I

**மொத்த மதிப்பெண்கள் 90**

| வ. எண் | விடை | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|
| I | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | 14 X 1 = 14 |
| 1 | அ) கருத்து 1 மற்றும் 2 சரி | 1 |
| 2 | அ) மழைத்துளிகள் | 1 |
| 3 | ஈ) இவை அனைத்தும் | 1 |
| 4 | ஆ) திருமணமும் குடும்பமும் | 1 |
| 5 | இ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார் | 1 |
| 6 | அ) கணிதம் | 1 |
| 7 | ஈ) (1) – (iv), (2)–(iii), (3)–(i), (4)–(ii) | 1 |
| 8 | ஆ) பொருட்குறிப்பு | 1 |
| 9 | அ) தூதுவர் | 1 |
| 10 | ஈ) பண்புத்தொகை | 1 |
| 11 | அ) பூமணி | 1 |
| 12 | இ) கோதை | 1 |
| 13 | ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் | 1 |
| 14 | ஆ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் | 1 |
| | | |
| | **பகுதி – II** | |
| | **பிரிவு – 1**<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** | 3 X 2 = 6 |
| 15 | **'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரம் ஆகிறது'**<br>❖ மழைக்காலம் ஆயினும் திடீரென வெளிப்பட்ட சூரிய வெளிச்சத்தால், நகரம் புதுப்பொலிவு பெற்றது போல் ஒளிர்கிறது. எனவே, இதனை நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரம் ஆகிறது என்கிறார் கவிஞர். | 2 |
| 16 | ❖ தருமமிகு சென்னையில் – அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின் | 1 |
| | ❖ கந்தகோட்டத்துள்வளர் தலமோங்கும் – கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே! | 1 |

| | | |
|---|---|---|
| 17 | **நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து**<br>❖ இராமனைக் கண்டதால், என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது என உரைக்கின்றாள். | 2 |
| 18 | **இறை மகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் புலம்பிய விதம்**<br>❖ மக்கள்,"பகைவர்களின் இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்க வில்லையே!"<br>❖ "வானம் இடிந்து விழவில்லையே!"<br>❖ "கடல்நீர் வற்றிப் போகவில்லையே !"<br>❖ மேலும், "இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏன்?" என்று இறை மகனாரின் இன்னலைக் கண்டு புலம்பினர். | 1/2<br>1/2<br>1/2<br>1/2 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | 2 X 2 = 4 |
| 19 | **நடை அழகியல்**<br>'நடைபெற்றியலும்' (கிளவியாக்கம், 26) என்றும் 'நடைநவின்றொழுகும்' (செய் .135) என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது. மேலும்,<br>ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை<br>வெண்பா நடைத்தே கலி (செய்.107)<br>என்றும் சொல்லுகிறது; | 1<br>1 |
| 20 | ❖ சங்ககாலத்தில் கண சமூகத்திற்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள்.<br>❖ தாய் வழியாகவே குலத் தொடர்ச்சி குறிக்கப்பட்டது.<br>❖ சங்ககாலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாயமுறை இருந்துள்ளது.<br>❖ தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன. | 1/2<br>1/2<br>1/2<br>1/2 |
| 21 | **அக்காலத்துக் கல்விமுறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள்**<br>❖ தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள்<br>❖ கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள். | 2 |

| | | |
|---|---|---|
| | ❖ சிறுவர்கள் படிக்கும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்றவை.<br><br>(எவையேனும் நான்கு நூல்கள் எழுதியிருப்பினும் முழுமதிப்பெண் வழங்கலாம்) | |
| | **பிரிவு – 3**<br>**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** | 7 X 2 = 14 |
| 22 | பாபு, **விளைந்து** கிடக்கும் நெல்லை நல்ல **விலை** கொடுத்து வாங்கினான்.<br>(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 2 |
| 23 | அ) மாற**னின்** பேச்சுத் திற**னை** யா**ரால்** வெல்ல முடியும்<br>ஆ) சான்றோரு**க்கு** மதிப்பு கொடுத்து வாழ்ந்**தால்** உயரலாம் | 1<br>1 |
| 24 | அ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்ற**ன**.<br>ஆ) அவன் வெண்மதியிடம் பேசி**னான்**. | 1<br>1 |
| 25 | 1. தொல்லை<br>2. காவல்<br>3. பெண்பால்<br>4. சரியோ | 1/2<br>1/2<br>1/2<br>1/2 |
| 26 | (அ) **இன்றைக்குச்சாயுங்காலம் (அ) மாலை** கபடி போட்டி நடைபெறும்.<br>(ஆ) ஐப்பசி **அடைமழையில் ஊருணி** நிறைந்தது. | 1<br>1 |
| 27 | அ) **பலகை** – என் தந்தை பலகைத் தொழில் செய்கிறார்<br>**பல கை** –எனக்குப் பல கைத்தொழில்கள் தெரியும்<br><br>ஆ)**தலைமை** – பெண்கல்வி வளர்ச்சிக்கான பொதுக்கூட்டத்தில் என் தந்தை தலைமை தாங்கினார்<br>**தலை மை** – வெள்ளை முடியைக் கருப்பாக்க தலை மை வாங்கினேன்<br><br>(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 1<br><br>1 |
| 28 | ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக<br>அ) அறுத்து – அறு+த்+த்+உ<br>அறு – பகுதி<br>த் – சந்தி<br>த் –இறந்த கால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | 2 |

| | | |
|---|---|---|
| | ஆ) களைந்து – களை+த் (ந் )+ த்+ உ<br>களை – பகுதி<br>த் – சந்தி ந் ஆனது விகாரம்<br>த் –இறந்த கால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | |
| 29 | ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக<br>அ) செம்பரிதி – செம்மை + பரிதி<br>விதி – ஈறுபோதல்<br><br>ஆ) ஏழையென – ஏழை + என<br>விதி – 1. இ ஈ ஐ வழி யவ்வும்<br>விதி – 2. உடல் மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே | 2 |
| 30 | ❖ திருவளர் செல்வன் என்பதே சரியான தொடராகும்.<br><br>❖ வினைத்தொகையில், வல்லினம் மிகாது | 1<br><br>1 |
| | **பகுதி – III** | |
| | **பிரிவு –1**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | 2 X 4 = 8 |
| 31 | **சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமை**<br><br>❖ "எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள்" இவை என்று கண்டவர் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும் சந்தனக்கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து வைத்தான்.<br>❖ தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான்.<br>❖ பூக்களையும் கொண்டுவந்து தூவினான்.<br>❖ மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான்.<br>❖ தெளிந்த நீரையும் எடுத்து வந்தான்.<br>❖ இறுதிச்சடங்கு செய்யப்படக் கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான். | 4 |
| 32 | **மனத்திட்பம் அவசியமான பண்பு:**<br>❖ நல்ல செயல்பாட்டிற்கு மன உறுதியே வேண்டும்.மற்றவை எல்லாம் பயன்படா.<br><br>❖ மனத்திட்பம் உடையவரே சொன்னதைச் | 1<br><br>1 |

| | | |
|---|---|---|
| | சொல்லியபடிசெய்வர்.<br>❖ எண்ணியவர் மனவுறுதி உடையவராக இருந்தால் அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.<br>❖ மனவுறுதி உடையவர் உருவத்தில் சிறியவராக இருந்தாலும் மிகப்பெரிய செயலைச் செய்யக் கூடியவல்லமை உடையவர். | 1<br>1 |
| 33 | **"ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்"**<br>**இடம் :**<br>❖ 'ஓங்கலிடை' எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலில் இடம் பெற்றுள்ளது.<br>**பொருள் :**<br>❖ சூரியனும் தமிழும் கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் உள்ள இருளைப் போக்கும் தன்மை வாய்ந்தன.<br>**விளக்கம்**<br>❖ சூரியன், தன் கதிர்களால் உலகில் உள்ள புற இருளைப் போக்கும். தமிழ், மக்களின் அக இருளைப் போக்கி அறியாமையை அகற்றும் சிறப்புடையது. | 2<br>1<br>1 |
| 34 | **யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே**<br>உவமை : யானை புகுந்த நிலம் போல<br>பொருள்: குறைவான நிலத்தில் விளையும் நெற்கதிர்கள் யானைக்குப் பல நாட்களுக்கு உணவானாலும், தானாகப் புகுந்து அந்த யானையே உண்டால் மிகுதியான உணவு வீணாகும். அதுபோல, அறிவுடை வேந்தன் வரி திரட்டும் முறையறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு செல்வத்தைப் பெற்று சிறப்படையும். முறைதவறி செய்வானாகில் யானை புகுந்த நிலம்போல, தனக்கும் பயன்படாது அவனைச் சுற்றியுள்ள நாட்டு மக்களும் துன்புறுவர். | 1<br>3 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | 2 X 4 = 8 |
| 35 | **வேளாண் மேலாண்மை**<br>❖ வேளாண்மைக் குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு.<br>❖ சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய நேரத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல், அறுவடைக்குப்பின் பாதுகாத்தல், உரிய விலை வரும்வரை | 4 |

| | | |
|---|---|---|
| | இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும், நிர்வாகநெறியும் இணைந்தால் வேளாண்மேலாண்மை செழிக்கும்.<br>(ஏதேனும் நான்கு வேளாண் மேலாண்மைக் கூறுகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கவும்) | |
| 36 | **மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்:**<br>❖ முதன் முதலில் ஒரு தட்டில் நெல் பரப்பி, அதன் மீது குழந்தையின் சுட்டுவிரல் பிடித்து எழுத கற்றுக் கொடுப்பது வழக்கம். இது இன்றும் நடைமுறையில் உள்ளது.<br>❖ திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஆற்று மணல் பரப்பி, அதன்மீது எழுதக் கற்றுக் கொடுப்பர்.<br>❖ எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும். உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத, அதன்மேல் பிள்ளைகள் எழுதுவார்கள். பிறகு தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள்.<br>❖ ஓலையில் எழுத்து பதியுமாறு எழுத்தாணி கொண்டு எழுதினர். தனித்தனியாகப் பனை ஓலைகளில் ஏடாக எழுதப்பட்டதை ஏடு என்றும், ஏடுகளின் தொகுப்பைச் சுவடி என்றும் அழைத்தனர்.<br>❖ அதன் பிறகு சிலேட்டும் பல்பமும் வந்தன. அதைத் தொடர்ந்து காகிதத்தில் எழுதப் பயிற்சிக் கையேடுகளும்,பென்சில்களும் வந்தன. கட்டைப்பேனாவும் மைக்கூடுகளும் பயன்படுத்தப்பட்டு, அவையும் மறைந்த பின்னர், மைஊற்றுப் பேனாக்களும், பந்து முனைப் பேனாக்களும் வந்தன.<br>❖ அண்மையில் கையால் எழுதும் பழக்கம் மாறி தட்டச்சு இயந்திரம், கணினி வந்தன. இப்போது கையால் எழுதும் பழக்கம் வெகுவாகக் குறைந்து வருகின்றது.<br>(எவையேனும் 4 கருத்துகள் இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 4 |
| 37 | **பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம்:**<br>❖ கணவன், மனைவி, மகன் ஆகிய மூவரும் வாழ்கின்ற தனிக்குடும்பம் வளர்ச்சி அடைந்தபோது, தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்பமே, மேலும் வளர்ந்து கூட்டுக் குடும்பமாக அமைந்தது.<br>❖ கணவனின் சகோதர சகோதரிகள், தாய், தந்தையர் இணைந்த குடும்பம் வளர்ந்து, இன்றைய கூட்டுக் குடும்பமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வகையில் பண்டைய விரிந்த | 4 |

| | | |
|---|---|---|
| | குடும்பத்தின் தொடர்ச்சியாக இன்றைய கூட்டுக்குடும்பம் விளங்குகிறது. | |
| 38 | **சங்கப்பாடல்களில் ஒலிக் கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்**<br>❖ எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன. இதையே ஒலிப்பின்னல் என்கிறோம்.<br>❖ "கடந்தடு தானை மூவிருங்கூடி<br>உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே"<br>என்ற வரிகளில், வல்லின மெய்கள் மிகுந்து வருதலைக் காணலாம்.<br>❖ "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்<br>கடாஅ யானைக் கலிமான் பேக"<br>❖ "புணரின் புணராது பொருளே"<br>❖ போன்ற பாடல் வரிகளில் உயிரொலிகள் குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. இந்த ஒலிக்கோலம் சங்கப்பாடல்களில் முக்கியப் பண்பென அறியமுடிகிறது.<br>(எவையேனும் 4 கருத்துகள் இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 4 |
| | **பிரிவு – 3**<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | 3 X 4 = 12 |
| 39 | **அணி விளக்கம் : 2 மதிப்பெண்**<br>**சான்று : 1 மதிப்பெண்**<br>**பொருத்தம் : 1 மதிப்பெண்**<br><br>**நிரல் நிறை அணி**<br>**அணி விளக்கம் :**<br>❖ ஒரு செய்யுளில், முன்னர் கூறியவற்றோடு தொடர்புடைய செய்திகளைப் பின்னர் கூறும்போது, முன்னர் கூறிய வரிசையில் நிறுத்தி நேரே பொருள் கொள்ளுமாறு கூறுவது நிரல்நிறை அணி ஆகும்.<br>**சான்று :**<br>❖ அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது<br>**பொருத்தம் :** | 4 |

| | | |
|---|---|---|
| | ❖ இக்குறளில், வாழ்வு சிறக்க அன்பும் அறமும் இன்றியமையாதன. அவை, இல்வாழ்வின் பண்பும் பயனும் ஆகும் என்று நேரே பொருள் கொள்ளுமாறு கூறுவதால் நிரல்நிறை அணி ஆகும்.<br><br>**(அல்லது)**<br>**சொற்பொருள் பின்வருநிலையணி**<br>**அணி விளக்கம்:**<br>❖ ஒரு செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, தந்த பொருளையே தருவது " சொற்பொருள் பின்வருநிலையணி".<br>**சான்று:**<br>❖ " எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"<br>**பொருத்தம்:**<br>❖ இக்குறளில் ' பொருள் ' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'கருத்து' எனத் தந்த பொருளையே தருகிறது.<br><br>(ஏற்புடைய குறள் எழுதி இருப்பினும் மதிப்பெண் வழுங்கலாம்.) | |
| 40 | **இலக்கிய நயம் பாராட்டுக**<br>மையக்கருத்து | 1 |
| | எதுகை<br>(பாடலின் அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வருவது)<br>❖ வெட்டி /கொட்டி<br>சட்டச்சட / எட்டு | 1 |
| | மோனை<br>(பாடலின் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றுபோல் வருவது)<br>❖ வெட்டி –வீரத் – விண்ணை<br>❖ கொட்டி– கூவென்று – குடையுது – காற்று<br>❖ சட்டச்சட – சட்டச்சட<br>❖ எட்டு – எங்கனம் | 1 |
| | அணி<br>❖ உயர்வு நவிற்சி அணி<br>(சந்த நயம், சுவை நயம், சொல் நயம், பொருள் நயம் போன்ற ஏற்புடைய நயங்கள் எழுதியிருப்பினும் மதிப்பெண் வழுங்கலாம்) | 1 |
| 41 | பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.<br>**பழமொழி விளக்கம் : 1 மதிப்பெண்** | 4 |

| | | |
|---|---|---|
| | **ஏற்புடைய வாழ்க்கை நிகழ்வு : 3 மதிப்பெண்**<br><br>அ) தினை விதைத்தவன் தினை அறுப்பான்<br>விளக்கம் : நாம் பிறருக்கு நன்மை செய்தால் நமக்கும் நன்மையே கிடைக்கும். தீமை செய்தால் தீமையே கிடைக்கும்.<br><br>(அல்லது)<br><br>ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்<br>விளக்கம் – ஒரு செயலைச் செய்வதற்கான முயற்சியை மீண்டும் மீண்டும் செய்தால் முடிவில் நம் நோக்கம் நிறைவேறும்.<br><br>( வாழ்க்கை நிகழ்வின்றிக் கருத்து மட்டும் விளக்கியிருந்தால் 2 மதிப்பெண் வழங்கலாம்) | |
| 42 | பாடண் திணை<br>**திணை விளக்கம்**<br>❖ ஒருவனுடைய புகழ், வலிமை, கொடை, அருள்போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணை.<br>**சான்று**<br>"வாயிலோயே! வாயிலோயே!" எனத் தொடங்கும் ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடல்<br>**பொருத்தம்**<br>❖ இப்பாடலில்,"நெடுமானஞ்சி தன்அறியலன் கொல்?" என்ற கூற்று அதியமானின் கொடைத்திறனைப் புலப்படுத்துகிறது.<br>( குறிப்பு – அறிவுடை நம்பியைப் பிசிராந்தையார் பாடியுள்ள **"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே"** என்ற பாடலை எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்) | 2<br><br>1<br><br>1 |
| 43 | 1. மொழி வளர்ச்சி<br>2. அரியதொரு கலை<br>3. தன் குழந்தையுடன் பேசுதல்<br>4. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெறும். | 1<br>1<br>1<br>1 |
| | **பகுதி – IV** | **3 X 6 = 18** |

| | | |
|---|---|---|
| 44 | **அ) தமிழின் சீரிளமைத் திறம்வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவன:**<br>எமதருமைச் செந்தமிழே!<br>❖ செம்மையான கதிரவன், மலைமேட்டில் தலையைச் சாய்க்கும் போது, வானம் எங்கும் செந்நிறப் பூக்காடாகத் தோன்றும்.<br>❖ அந்தச் சிவப்பு நிறத்தைத் தங்கள் கைகள் பெறுமாறு கடினமாக உழைக்கும் தொழிலாளர்களின் பருத்தத் தோள்களில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாக அரும்பி நிற்கும்.<br>❖ இவற்றையெல்லாம் வியந்து பாடுவதற்கு, உன்னையன்றிச் சிறந்த துணை வேறு இருக்க முடியுமா? நீயே கூறுவாயாக! என் உள்ளத்தில் மூண்டு எழும் கவிதை வெறிக்கு நீயே உணவாக இருக்கிறாய்!<br>❖ இயல், இசை ,நாடகம் என மூன்றாகத் தழைத்து வளர்ந்த தமிழே! முன்பு ஒரு காலத்தில் நீ, பாண்டியர் உருவாக்கிய சங்கத்தில் கொலு வீற்றிருந்தாய்! பாரி முதலானவர்களைப் பெற்றெடுத்தாய்!<br>❖ தமிழே! எம் மெய் சிலிர்க்குமாறு பழமை நலத்தைப் புதுப்பிப்பதற்காக நீ மீண்டும் குயிலாக வந்து, கூவ வேண்டும்.<br>❖ தென்றல் தவழும் குளிர்ந்த பொதிகை மலையில் தோன்றி வளர்ந்த தமிழே! தடைகள் இருந்தால் அவற்றையெல்லாம் கூண்டை உடைத்து எழுந்து வெளிப்படும் சிங்கம் போல் சீறி வரவேண்டும்.<br>என்று தமிழின் சீரிளமைத் திறம்வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் கூறுகிறார்.<br>(அல்லது) | 6 |

| | | |
|---|---|---|
| | **ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்கு த்துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுதல்:**<br>❖ அறிவு அழிவு வராமல் காக்கும் கருவியாகும்;<br>❖ அன்றியும் பகைகொண்டு அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாகும்.<br>❖ மனத்தை அது போகின்ற போக்கில் செல்லவிடாமல் தீமைகளில் இருந்து விலக்கி நல்வழியில் செலுத்துவதே அறிவாகும்.<br>❖ எப்பொருளை யார்சொல்லக்கேட்டாலும் அப்பொருளின் உண்மைப்பொருளைக் காண்பது அறிவு.<br>❖ உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ அந்தநெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.<br>❖ பின்பு வரப்போவதை முன்னரேஅறிந்து காத்துக்கொள்ளும் வல்லமைகொண்ட அறிவுடையோருக்கு அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை. | 6 |
| 45 | **அ)** குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது:<br>❖ எந்த மனிதச் சமூகக் கட்டமைப்பிற்கும் குடும்பமே அடிப்படை அலகாகும். பல குடும்பங்கள் சேர்ந்ததே ஓர் ஊர் எனப்படும். ஊர்கள் பல இணைந்து அமைப்பில் விரிவடைந்து குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் எனப் பெயர் பெறுகின்றன.<br>❖ குடும்பம் என்ற அடிப்படை அலகில் கட்டமைக்கப்படுவதே சமூகம்.குடும்பம் உருவாகத் திருமணம் என்ற பந்தமே அடிப்படை.<br>❖ சமூகம் என்பது பல குடும்பங்கள் சேர்ந்து வாழ்வது. பலவித குழுக்கள் சமூகத்தில் இருக்கலாம். பழக்கவழக்கங்கள், மொழி,மதம் இவற்றாலும் பல குழுக்கள் அமையலாம். மனிதனைச் சமூக வயப்படுத்துவது குடும்பமே. குடும்பமே வாழிடம்,ஊர், நகரம் என வளர்கின்றது.<br>❖ தாய்வழிக் குடும்பம், தந்தைவழிக் குடும்பம், தனிக்குடும்பம்,விரிந்த குடும்பம் எனப் பலவகைப் பெயர்களில் குடும்பம் வளர்ச்சியைப் பெற்றுள்ளது.<br>❖ சமூகம், குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அதன் தொடர்ச்சியாகவே இன்றைய சமூக | 6 |

| | | |
|---|---|---|
| | அமைப்பும் கூட்டுக்குடும்பம், தனிக் குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாக இருக்கின்றது. தனிக்குடும்பம் விரிவு பெற்று கணவன், மனைவி ஆகியோருடன் அவர்களது பெற்றோரும் சேர்ந்து வாழும் முறையும் காணமுடிகிறது.<br>❖ இவ்வாறு குடும்பம் என்ற சிறிய அமைப்பிலிருந்து மனித சமூகம் என்ற பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. தொன்மைமிக்க குடும்ப அமைப்புமுறையே தமிழ்ச் சமூகத்தின் பெருமிதமான அடையாளமாகும்.<br>('தமிழர் குடும்பமுறை' பாடத்திலிருந்து கருத்துகள் எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்)<br>**(அல்லது)**<br>**ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துக்கள்:**<br>**வெ. இறையன்பு கூறும் மேலாண்மைகள்:**<br>❖ உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை. ஆனால் யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக் கொண்டால் போதும். தெரிந்திருப்பது ஒருவகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றொரு அறிவு.<br>❖ நாலடியார் அதையே பக்குவமாகச் சொல்கிறது.<br>"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்<br>நல்லறிவு நாளுந் தலைப்படுவர் – தொல் சிறப்பின்<br>ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு<br>தண்ணீருக்குத் தான்பயந் தாங்கு."<br>❖ நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்பவன், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான்.<br>❖ இதையே, ஷேக்ஸ்பியரின் நிதி மேலாண்மை பற்றிய நாடகம் விளக்குகின்றது. டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான். அவன் வரவு குறைந்தாலும் செலவு நீடித்தது. அவனது உதவியாளர் நிதி நிலைமையைப் பற்றிப் பேச வருகிற பொழுதெல்லாம் கேட்க மறுத்தான். ஒரு கட்டத்தில் கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரிக்கிறார்கள். ஆனால் | 1<br>1<br>3 |

| | | |
|---|---|---|
| | அப்போதும் அவன் வருந்தவில்லை. தான் அளித்த விருந்தை உண்டவர்கள் உதவுவார்கள் என்று பொய்க்கணக்குப் போடுகிறான். அவனுடைய சேவகர்கள் நான்கு திசைகளுக்கும் சென்று வெறுங்கையோடும் வெளிறிய முகத்தோடும் திரும்புகிறார்கள். அவன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான். மனித இனத்தையே வெறுக்கிறான். இவ்வாறு 'டைமன்' பற்றிய ஷேக்ஸ்பியரின் நாடகம் நிதி மேலாண்மை பற்றிய மிகச்சிறந்த வாழ்வியல் விளக்கம்.<br>❖ ஔவையார் நல்வழியில்,<br>"ஆன முதலில் அதிகம் செலவானால்<br>மானம் அழிந்து மதிகெட்டுப் – போனதிசை<br>எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்<br>நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."<br>என்று நிதியைக் கண்டபடி கையாள்பவர்களுக்கு அறிவுறுத்துகிறார். | 1 |
| 46 | **அ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன"**<br>❖ வீழும் விவசாயம் – கரைந்து போன கலைகள் – உருமாறும் கிராமங்கள் – வீட்டின் நிகழ்ச்சிகள் நகரங்களில் நடக்கின்றன – நாகரிகப் போர்வைக்குள் மறைந்து வரும் கிராமங்கள் – உயிர்த்துடிப்பு<br><br>(ஏற்புடைய செய்திகளைச் சொந்த நடையில் எழுதியிருப்பின் உரிய மதிப்பெண் வழங்கலாம்)<br><br>( அல்லது)<br>**ஆ)பாரதியின் கடிதம் வாயிலாக அறிந்து கொண்ட மொழிப்பற்று , சமூகப் பற்று**<br>**மொழிப்பற்று:**<br>❖ தமிழை வளர்ப்பதையே எப்போதும் கடமையாகக் கொள்ளவேண்டும்.<br>❖ தமிழில் புதியன புகுதல் வேண்டும்.<br>❖ உண்மை இன்பம் அதிகமாக வேண்டும்.<br>❖ தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தோன்ற வேண்டும்.<br>❖ பிறமொழியில் உள்ள இசை, சிற்பம், பூமி நூல்கள், வானநூல்கள் என அனைத்துத்துறை சார்ந்த நூல்களும் தமிழில் பெருக வேண்டும். | 6<br><br>3<br><br>3 |

www.Padasalai.Net www.CBSEtips.in

| | | |
|---|---|---|
| | **சமூகப் பற்று:**<br>❖ நம்மைவிட மெலியவருக்கு நாம் இரக்கப்பட்டு அவர்களை நமக்கு இணையானவராக ஆக்க வேண்டும்.<br>❖ அனைத்து துறையிலும் உயரவேண்டும்.<br>❖ ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்று கொள்ளல் வேண்டும்.<br>❖ பெண்ணைத் தாழ்த்துபவர்கள் தன் கண்ணைத்தானே குத்திக் கொண்டதற்குச் சமம்.<br>❖ நாட்டில் வியாபாரத்திலும், தொழிலிலும், இயந்திரத்திலும் முன்னேற்றம் வேண்டும். | |
| | **பகுதி – V** | **4 + 2 = 6** |
| **47** | **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.** | |
| | அ) **தெய்வமணிமாலை**<br>ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற<br>உத்தமர்தம் உறவுவேண்டும்<br>உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்<br>உறவுகல வாமைவேண்டும்<br>பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை<br>பேசா திருக்கவேண்டும்<br>பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்<br>பிடியா திருக்கவேண்டும். | <u>4</u> |
| | ஆ)<br>வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்<br>தெய்வத்துள் வைக்கப் படும். | <u>2</u> |